# புகையில்லா போகி, 2022



**திருமதி. போ. ராஜேஸ்வரி, இ.வ.ப.,**
**இயக்குநர், சுற்றுச்சூழல் துறை**

### தமிழ் நாடு சுற்றுச்சூழல் துறையின் அன்பான வேண்டுகோள் !

பொங்கல் என்பது தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் அறுவடைத்திருநாள் பண்டிகை ஆகும். பொங்கல் பண்டிகையானது, உழைக்கும் மக்கள், இயற்கை தெய்வமாகக் கருதப்படும் சூரியனுக்கும், மற்ற உயிர்களுக்கும் சொல்லும் ஒரு நன்றியறிதலாகக் கொண்டாடப்படுகிறது. இந்த பண்டிகை கடவுளான சூரிய தேவனுக்கும், இயற்கைக்கும் அர்ப்பணிக்கப்பட்டது.

பொங்கல் பண்டிகையின் முந்தைய நாளில் போகிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. போகிப் பண்டிகை என்பது **“பழையன கழிதலும் புதியன புகுதலும்”** என்ற அடிப்படையில் போகிப் பண்டிகை விழாவாகக் கொண்டாடப்படுகிறது. போகிப் பண்டிகை என்பது ‘மார்கழி’ மாதத்தின் கடைசி நாளாகும். தற்போதைய வழக்கத்தில் உள்ள பழைய பொருட்கள், தேவையில்லாத ஆடைகள் மற்றும் தூக்கி எரியும் நெகிழிகள் ஆகியவற்றை எரித்து போகிப் பண்டிகையை கொண்டாடி வருகின்றனர். போகிப் பண்டிகை அன்று டயர்கள் மற்றும் பயன்படுத்த முடியாத பழைய பொருட்களை எரிப்பதினால் **“டயாக்ஸின்”** என்னும் நச்சுப்புகை பரவும். அதனால் கண், மூக்கு தொண்டையில் எரிச்சலும் நுரையீரல் சம்பந்தப்பட்ட புற்றுநோய், தோல் நோய் போன்ற நோய்களும் ஏற்படும். டயர்கள், பழைய துணிகள் மற்றும் இதர கழிவுகளை எரிப்பதினால் காற்று மாசுபடுதல் மற்றும் ஓசோன் படலத்தில் பாதிப்பு ஏற்படுதல் ஆகியவை உண்டாகும்.

எனவே, வீட்டிலேயே தேவையற்ற பொருட்கள் அதாவது ஆடைகள், காகிதங்கள், அட்டைகள், கட்டைகள், நெகிழி ஆகியவற்றை தனித் தனியாகப் பிரித்து சேகரித்து அதனை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளிடம் சேர்த்திடுங்கள். அவை மிகவும் பயனுள்ளதாக அமையும். அதனால் வீடும் நகரமும் தூய்மையாக இருக்கும்.

சுற்றுச்சூழல் துறையின் மூலமாக புகையில்லாத போகிப் பண்டிகையை கொண்டாட வேண்டுமென்று இதன் மூலம் விழிப்புணர்வு மக்களுக்கு ஏற்படுத்தப்படுகிறது. மேலும் கோவிட்–19 வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என கேட்டுக்கொள்ளபடுகிறது. சுற்றுச்சூழல் துறையின் சார்பில் பொங்கல் நல்வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**“புகையில்லா போகி புன்னகை பூக்கும் பூமி”**

இயக்குநர்
சுற்றுச்சூழல் துறை